## மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைப் பணிகள் தொடக்கம்

# கழகத் தலைவரின் திட்டங்களால் மீனவர்கள் வாழ்வில் ஏற்றம்!

### கழக மீனவர் அணிச் செயலாளர் – மீனவர் நலவாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் பேச்சு!

குமரி, ஜன. 11–

கழகத் தலைவரின் ஆட்சியில் மீனவர்கள் வாழ்வில் ஏற்றம் தரும் வகையில் பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் மீனவர் நலவாரியத்தில் அதிக அளவிலான மீன்பிடித் தொழிலாளிகளை உறுப்பினராக சேர்க்க கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கையை கழக மீனவர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான அ.ஜோசப் ஸ்டாலின் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார். இதற்கென தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. 8 ஆம் தேதி முதல் தொடங்கிய இந்த முகாம், வரும் 31 ஆம் தேதிவரை நடக்கிறது.

தொடக்க நாளில் முட்டம், கடியப்பட்டிணம், குளச்சல், கோடிமுனை, இணையம், தேங்காய் பட்டினம், தூத்தூர், வள்ளவிளை ஆகிய மீனவ கிராமங்களில் உறுப்பினர் சேர்க்கையும், அது தொடர்பான விழிப்புணர்வு முகாமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேசிய கழக மீனவர் அணிச் செயலாளரும், மீனவர் நலவாரிய தலைவருமான அ.ஜோசப் ஸ்டாலின், கடல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும், மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர வேண்டியது மிக,மிக அவசியம். தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் வாயிலாக பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதையெல்லாம் மீனவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் நலவாரியத்தில் உறுப்பினராவது மிகவும் அவசியம்.

மீன்பிடித் தொழில் என்பதே... இயற்கை சீற்றங்கள், மாறிவரும் கடல் காலநிலை, பருவநிலை மாறுபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் மிகவும் அபாயம் கொண்டதாக உள்ளது. மற்ற தொழில்களை ஒப்பிடுகையில் கடல் தொழில் அதிகளவிலான ஆபத்துகள் நிறைந்தது. அதே நேரத்தில் நாட்டிற்கே அதிக அளவு அந்நிய செலவாணியை ஈட்டி தருவதில் மீனவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

எந்தச் சூழலிலும் கடல் அன்னை மீனவர்களை கண்ணின் இமைபோல் காப்பதைப் போல, கழகத் தலைவர், முதல்வர் அவர்களும் மீனவர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஐந்தாயிரம் ரூபாயாக



இருந்த மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியது முதல்வர் அவர்கள் தான். அந்தவகையில் மீனவ சமூகத்திற்கு முதல்வர் அவர்கள் தந்த திட்டங்கள் ஏராளம் என்பதையும் உங்கள் மத்தியில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

தலைவர் அவர்களின் பொற்கால ஆட்சியில் குமரிமாவட்ட கடற்கரை கிராமங்களின் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மட்டும் 567 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அண்மையில்கூட தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள், கன்னியாகுமரி பெரியநாயகி தெரு மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவுடன் கூடிய மீன் இறங்குதளம் ஆகியவை அமைக்கப்பட்டு முதல்வரே காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

இப்படி, கழக ஆட்சியில் மீனவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் மீனவர்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து ஒவ்வொரு மீனவரும் சிந்தித்து எதிர்வரும் தேர்தல் காலத்தில் செயல்பட வேண்டும். என்று கூறினார்.

தொடர்ந்து கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான அ. ஜோசப் ஸ்டாலின் மீனவ கிராமங்களில், கழகத் தலைவர், முதல்வரின் உத்தரவின்படி, தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகத்தை தொடக்கி வைத்தார். அதில் பேசிய அ.ஜோசப் ஸ்டாலின், கழகத் தலைவர் அவர்கள் பொங்கல் பரிசுப் பொருட்களுடன், மூவாயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கியுள்ளார். பொங்கல் பொங்குவது போல், இல்லம் எல்லாம் இன்பம் பொங்கட்டும். மீனவ மக்களுக்கு ஏராளமான திட்டங்களை வழங்கியுள்ள திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட, மீண்டும் 2.0 அமைந்திட மீனவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். என்று பேசினார்.

## கலைஞர் நகர் 128வது வட்டக் கழகச் செயலாளர்

# மு.கோவிந்தராஜன் தாயார் எம்.வடுவம்மாள் படத்திறப்பு நிகழ்ச்சி!

### ஏ,எம்,வி,பிரபாகர் ராஜா - க,தனசேகரன் - மு,இராசா - கே,கண்ணன் - கீ,வே,ஆனந்தகுமார் பங்கேற்பு!

*சென்னை, ஜன. 11*

*சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 128 வட்டக் கழகச் செயலாளர் மு.கோவிந்தராஜனின் தாயார் எம்.வடுவம்மாள் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (11.01.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணி அளவில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பலிங்கப்பட்டு கிராமத்தில் உள்ள எங்கள் இல்லத்தில் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர், க.தனசேகரன் எம்.சி, கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மு. இராசா எம்.சி, கலைஞர் நகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கீ.வே. ஆனந்தகுமார், ஒன்றிய துணைச் செயலாளர் கே.ஏ.திருமலை, வட்டக் கழகச் செயலாளர் வி.ஏ.ராஜா, 127 வது மாமன்ற உறுப்பினர் பொன். வர.லோகு, எஸ்.மைக்கேல், தஞ்சை ஆர்.பாபு, பழக்கடை பாஸ்கர் மற்றும் கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*



பம்மல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் என்.பன்னீர்செல்வம் மற்றும் 8 வது வட்ட அவைத் தலைவர் என். ஸ்ரீதர் ஆகியோரின் தந்தை சி.நடராஜன் அவர்கள் படத்திறப்பு பம்மல் தெற்கு பகுதி செயலாளர் மண்டலம் 1 குழு தலைவர் வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும் பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட ,மாநகர,பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டு அவரின் திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட மாடல் நல்லாட்சியில்

# எழும்பூர் தொகுதி சாமிரெட்டிபுரம் - பூபதி நகர் பகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள்!

### இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.11–

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடந்துவரும் திராவிட மாடல் நல்லாட்சியில், மாண்புமிகு இளந்தலைவர்துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், எழும்பூர் தொகுதியில் வார்டு எண்.61, சாமிரெட்டிபுரம் மற்றும் பூபதி நகர் பகுதியில் மிக நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் குடும்பங்களுக்கு, அவர்களது நெடுநாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், ஆட்சேபணையில்லாத அரசு புறம்போக்கு நிலங்களில் மிக நீண்ட காலமாகக் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அனுமதித்து வெளியிடப்பட்ட அரசாணை எண்.97 மற்றும் அரசாணை எண்.205 ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை சார்பில், எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டில் உள்ள உலகப் பல்கலைக்கழக சேவை மையத்தில் நடந்த விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு சாமிரெட்டிபுரம் மற்றும் பூபதி நகர் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, சாமிரெட்டிபுரம் பகுதியில் கார்ப்பரேஷன்பள்ளிக் வகைப்பாடு கொண்ட மனைகளில் நீண்ட காலமாகக் குடியிருந்து வரும் குடும்பத்தினருக்கு, 2010 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்ட குறிப்பின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு 11.07.2022 தேதியிட்டுக் கடிதம் அளித்தார்.

மேலும், சாமிரெட்டிபுரம் பகுதியில் குடியிருந்து வருவோருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிட வேண்டும் என்பதை எழும்பூர் தொகுதியில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருந்துவரும் பத்து கோரிக்கைகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டு சென்னை மாவட்ட ஆட்சியருக்கு 14.09.2022 தேதியிட்டுக் கடிதம் அளித்தார்.

சாமிரெட்டிபுரம் உள்ளிட்டு எழும்பூர் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் அரசு நிலங்களில் குடியிருந்து வரும் தகுதியுள்ள மனைதாரர்கள் அனைவருக்கும் கிரையப் பத்திரமும், பட்டாவும் வழங்குவது தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் 14.08.2023 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் திரு.எஸ்.சண்முகம், ஐ.ஏ.எஸ்., முன்னிலையில் நடந்தது. இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்களும் பங்கேற்றனர்.

மேலும், இப்பொருள் தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் 16.08.2024 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், எழும்பூர் மற்றும் புரசைவாக்கம் வட்டாட்சியர்கள், நில அளவை அலுவலர்கள் கலந்துகொண்ட கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டங்களைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சி மற்றும் எழும்பூர் வட்டாட்சியர் அலுவலர்கள் இணைந்து, சாமிரெட்டிபுரத்தில் குடியிருந்துவரும் குடும்பங்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் அது தொடர்பான ஆதார் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்றனர்.

இவ்வாறான நிலையில் தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் ஆட்சேபணையில்லாத அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக குடியிருந்துவரும் குடும்பத்தினருக்கு பட்டா வழங்குவது தொடர்பாக அரசாணை எண்.97 மற்றும் அரசாணை எண்.205 ஆகிய இரண்டு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த அரசாணைகளின்படி சாமிரெட்டிபுரத்தில் கார்ப்பரேஷன் பொது நிலத்தில் குடியிருந்துவரும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்குவது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் 15.05.2025 அன்று எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் வட்டாட்சியர் முன்னிலையில் எழும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சாமிரெட்டிபுரத்தில் குடியிருந்துவருவோரின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மேற்கண்ட இரண்டு அரசாணைகளில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி எழும்பூர் வட்டாட்சியர் அலுவலர்கள் சாமிரெட்டிபுரம், கார்ப்பரேஷன் பொதுநிலத்தில் குடியிருந்துவருவோர் குறித்த கணக்கெடுப்பினை மேற்கொண்டனர்.

இக்கணக்கெடுப்பினைத் தொடர்ந்து, சாமிரெட்டிபுரம், கார்ப்பரேஷன் பொது நிலத்தில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்க தடையில்லாச் சான்று வழங்கிட அனுமதித்து சென்னை பெருநகர மாநகராட்சியின் சார்பில் மன்றத் தீர்மானம் எண்.1107/2025 நிறைவேற்றப்பட்டது.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, பூபதி நகர் பகுதியில் சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் மிக நீண்ட காலமாக வசித்து வரும் குடும்பத்தினருக்கு வருவாய்த்துறை வெளியிட்ட இரண்டு அரசாணைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் முன்னிலையில், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் 10.09.2025 அன்று ஆய்வுக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், எழும்பூர் வட்டாட்சியர் மற்றும் நில அளவை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலம் பொதுப்பணித்துறைக்குப் பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கு நிலம் என வருவாய்த்துறை பதிவேடுகளில் குறிக்கப்பட்டிருந்ததால், இக்குடும்பத்தினருக்குப் பட்டா வழங்கிட ஏதுவாக பொதுப்பணித்துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெற வேண்டும் என வருவாய்த்துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

மேலும், பொதுப்பணித்துறை அதிகாரிகளும், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை அலுவலர்களும் இந்நிலப்பகுதியைக் கூட்டுத் தணிக்கை செய்து, சர்வே எண்.465/3இல் காட்டப்பட்டுள்ள காலிமனையானது பொதுப்பணித்துறைக்குப் பாத்தியப்பட்ட சர்க்கார் புறம்போக்கு நிலமாகும் என உறுதிப்படுத்தினர்.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சருக்கு 10.9.2025 தேதியிட்டு அளித்த கடிதத்தில், பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான காலிமனை எனக் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.465/3, பூபதி நகர் பகுதியில் குடியிருந்துவருவோருக்குப் பட்டா வழங்கிட ஏதுவாக தடையில்லாச் சான்றிதழ் வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

எழும்பூர் வட்டாட்சியர் அலுவலர்களால் அரசாணை எண்.97 மற்றும் 205 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி பூபதி நகரில் வசித்து வருவோர் குறித்துக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

திராவிட மாடல் நல்லாட்சியில் வெளியிடப்பட்ட இரண்டு அரசாணைகளின் அடிப்படையிலும், மாண்புமிகு கழகத் தலைவர் மற்றும் மாண்புமிகு இளந்தலைவர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, சாமிரெட்டிபுரம் மற்றும் பூபதி நகர் பகுதிகளில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கப்படாமல் இருந்து வந்த அவர்களது கோரிக்கை, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைந்த நான்கே ஆண்டுகளில் தீர்க்கப்பட்டுள்ளது. இதற்காக வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற்ற குடும்பத்தினர் அனைவரும் முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், சேத்துப்பட்டு, உலகப் பல்கலைக்கழக சேவை மைய அரங்கில் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, சாமிரெட்டிபுரம் மற்றும் பூபதி நகர் பகுதியில் மிக நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் குடும்பங்களுக்குப் பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கினார்.

# மின் கழகத் தொ.மு.ச. மத்திய சங்கத் தேர்தல்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை யில் இணைந்து செயல்பட்டு வரும் "தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்" (பதிவு எண் **38/CPT**, பேரவை இணைப்பு எண். 26) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவை இணைப் பொதுச்செயலாளர் திரு. **ஜெ.விஜய குமார்** அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதன்படி கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணையின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் – 10.01.2026 நண்பகல் 12.30 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் – 19.01.2026 காலை 11.00 மணி

வேட்பு மனு தாக்கல் – 20.01.2026 காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை

வேட்புமனு பரிசீலனை –20.01.2026 மதியம் 1.30 மணி முதல் மதியம் 3.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 20.01.2026 மதியம் 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–20.01.2026 மதியம் 3.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–20.01.2026 மாலை 6.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு–25.01.2026 காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**குறிப்பு:–**

1)தேர்தல் நடைமுறைகளான வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனுத்தாக்கல், வேட்பு மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் உள்ளிட்டவை சென்னை அண்ணா சாலையில் உள்ள மின் கழக தொ.மு.ச. மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

2)வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவுகள் அறிவித்தல் ஆகிய பணிகள் திருச்சி பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறும்.

3) தேர்தல் விதிமுறைகள், வேட்பு மனு மற்றும் வேட்பாளர் கட்டணம் விபரங்கள் தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

**தேர்தல் ஆணையரின் முடிவே இறுதியானது.**

10.01.2026 **மு.சண்முகம்**, Ex.MP

இடம் : கலைஞரகம் பொதுச்செயலாளர்,

தொ.மு.ச. பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிறுவேடல் வெ.கணேசன்

### சனவரி 11 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவேடல் கிளைக் கழகச் செயலாளர் – வாலாஜாபாத் ஒன்றிய இணைச் செயலாளர் – ஒன்றிய துணைச் செயலாளர் – மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜாபாத் ஒன்றியக்குழு உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வாலாஜாபாத் நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 'சிறை சென்ற செம்மல்' என்று அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரூர் கே.ஆர்.சுப்பிரமணி

### சனவரி 11 (2020)



1968ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்திலேயே, இந்தித் திணிப்பை எதிர்த்து மொரப்பூர் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் அரூர் நகரில் 'இளைஞர் தி.மு.க.' அமைப்பை தொடங்கி மாவட்டம் முழுவதும் கழகக் கொள்கை பரப்ப துவங்கிய இவர், அரூர் ஒன்றிய துணை துணைச் செயலாளர், பேரூர்ச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணி மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கறுப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் அரசாணை எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், கலைஞர் கைது எதிர்ப்பு மற்றும் ராணிமேரி கல்லூரி பிரச்சினையில் கழகத் தலைவர் கைது எதிர்ப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**